# 6

*சபை:*

# இதன் தோற்றம் அப்பொழுதும் இப்பொழுதும்

## *முதல் சபை எவ்விதம் வளர்ந்தது (கி.பி. 30)*

1. ***பிரசங்கிக்கப்பட்ட மூன்று அடிப்படை உண்மைகள் யாவை (அப். 2:23, 24, 36)?***
2. ***இந்தப் பிரசங்கித்தலினால் பலர் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள் (அப். 2:37)?***
3. ***கேள்வி கேட்ட இந்த மக்கள் என்ன செய்யும்படி கூறப் ர்கள் (அப். 2:38)?***
4. ***யார் ஞானஸ்நானம் பெற்றார்கள்? அவர்கள் எதனுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப். 2:41, 47)?***
5. ***கீழ்ப்படிந்த இவர்கள் இப்பொழுது என்னவாக இருந்தார்கள் அப். 2:47; 8:1)?***
6. ***முதல் சபையில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் எவ்வாறு உறுப்பினர்கள் ஆனார்கள்?***

## *சமாரியாவில் சபை எவ்வாறு தொடங்கியது (கி.பி. 36)*

1. ***எருசலேம் சபையிலிருந்து "சிதறிப் போன" உறுப்பினர்கள் என்ன செய்தார்கள் (அப். 8:4)?***
2. ***"சமாரியாவின் நகருக்கு" சென்றது யார்? அவர் அறிவித்தது என்ன (அப். 8:5)?***
3. ***பிரசங்கிக்கப்பட்டது விசுவாசிக்கப்பட்ட பொழுது, என்ன செய்யப்பட்டது (அப். 8:12)?***
4. ***கீழ்ப்படிதலுள்ள இந்த ஆண்களும் பெண்களும் என்னவென்று அழைக்கப்பட்டார்கள் (அப். 9:31)?***

   *என்றால், சமாரியாவில் சபை எவ்விதம் தொடங்கியது?*

## *பிலிப்பிய சபை எவ்வாறு தொடங்கிற்று (கி.பி. 50)*

1. ***லீதியாள் மற்றும் அவளுடைய வீட்டார் ஆகியோரின் மனமாற்றம் எவ்வாறு தொடங்கிற்று (அப். 16:13)?***

2. ***அவர்களுக்குப் பவுல் பிரசங்கித்தது என்ன (எபே. 1:13; 1 பேது. 1:25)?***
3. ***இந்தப் பெண்களின் குழுவின் கீழ்ப்படிதல் என்னவாக இருந்தது (அப். 16:15)?***
4. ***பிற்பாடு, சிறையதிகாரிக்கும் அவரது வீட்டாருக்கும் பவுல் பிரசங்கித்தது என்ன (அப். 16:32)?***
5. ***சிறையதிகாரியும் அவர் குடும்பத்தாரும் உடனடியாகச் செய்தது என்ன (அப். 16:33, 34)?***
   *அ. பிற்பாடு, இந்த வீட்டாரைப் பவுல் எவ்வாறு குறிப்பிட்டார் பிலி. 1:1; 4:15)?*
   *ஆ. என்றால், பிலிப்பிய சபை எவ்வாறு தொடங்கிற்று?*

## *கொரிந்திய சபை எவ்வாறு தொடங்கிற்று (கி.பி. 50-52)*

1. ***கொரிந்துவில் பவுல் தம் ஊழியத்தை எவ்விதம் தொடங்கினார் (அப். 18:4, 5)?***
2. ***இந்தக் கொரிந்தியருக்கு அவர் பிரசங்கித்தது என்ன (1 கொரி. 15:1-4)?***
3. ***இந்த மக்களின் கீழ்ப்படிதல் எவ்வாறு விளக்கப்பட்டது (அப். 18:8)?***
4. ***பிற்பாடு, பவுல் மனம் மாறிய இவர்களை எவ்வாறு குறிப்பிட்டார் (1 கொரி. 1:1, 2; 2 கொரி. 1:1, 2)?***
   *என்றால், கொரிந்துவில் இருந்த சபை தனது தொடக்கத்தைப் பெற்றிருந்தது எவ்வாறு?*

## *புதிய ஏற்பாட்டு சபைகள் இப்பொழுது எவ்வாறு தொடங்குகின்றன*

1. ***அப்போஸ்தலர்களின் நாட்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், அதை விசுவாசித்தல், பாவங்களிலிருந்து மனந்திரும்புதல், மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவை சபையின் உறுப்பினர்களை ஏற்படுத்தின என்றால், இப்பொழுது அதே போதனைக்குக் கீழ்ப்படிதல் என்பது புதிய ஏற்பாட்டு சபைகளை ஏற்படுத்தாதா?***
2. ***(பிரதான) கட்டளையின் கீழ் அப்போஸ்தலர்கள் என்ன செய்ய வேண்டியதாய் இருந்தது (மத். 28:19, 20; மாற். 16:15, 16; லூக். 24:46-49)?***
   *அ. இந்தக் கட்டளையின் கீழ் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்ன செய்ய வேண்டியிருந்தது (மத். 28:19, 20)?*
   *ஆ. ஞானஸ்நானம் பெற்றவர்கள் எப்பொழுதும் எதனுடன் சேர்க்கப்பட்டனர் (அப். 2:41, 47)?*
   *இ. ஆகையால், பிரதான கட்டளை இப்பொழுது பிரசங்கிக்கப் பட்டு, அதன் நிபந்தனைகள் உண்மையாய்க் கீழ்ப்படியப்*

*பட்டால், கீழ்ப்படிபவர்கள் எதனுடன் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் (அப். 2:41, 47)?*

## விவரிக்கப்படும் கொள்கை

1. ***நோவாவின் பேழை பற்றிய விவரிப்பைத் தரவும் (ஆதி. 6:14-16).*** *நோவாவின் பேழையினுடைய மாதிரி ஒன்றைக் கட்டிடக் கலைஞர் ஒருவர் எவ்வாறு உண்டாக்க முடியும்?*
2. ***படிக்கப்பட்ட பாடத்திலிருந்து, அப்போஸ்தலர்களின் நாட்களில் சபைகள் எவ்வாறு தொடங்கின?***
   - *அ. அப்பொழுது பிரசங்கியார்கள் மற்றும் போதகர்கள் யாவரும் என்ன செய்ய வேண்டியிருந்தது (2 தீமோ. 1:13; 2:2)?*
   - *ஆ. இந்த முன்மாதிரி இப்பொழுது பயன்படுத்தப்பட்டால் அது எதனை உண்டாக்கும்?*
3. ***இயல்பு மற்றும் கிருபை ஆகிய இரண்டிலும் தேவனுடைய கட்டளை என்ன (ஆதி. 1:11; கலா. 6:7, 8)?***